**மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**அசல் வழக்கு எண்.411/2024**

| **சாட்சியின் பெயர்** | ஜெயபால் | **மதம்** | இந்து |
|---|---|---|---|
| **த/பெ** | சிவலிங்கம் | **தொழில்** | விவசாயம் |
| **சாட்சி எண்.** | வா.சா.1 | **வயது** | 48/2025 |
| **ஊர்** | சுப்பம்பேட்டை | **மாவட்டம்** | விழுப்புரம் |

14.10.2025 அன்று 1873ம் ஆண்டு சட்டம் 10ன்படி என்னால் உறுதி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது

**விசாரணை தொடங்கும் நேரம்** : காலை 11.40 மணி

வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**குறுக்கு விசாரணை**

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் அவர்களுடைய சொத்தை எனக்கு விற்பனை செய்வதாக பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார்கள் அதன்படி மண்ணை ஒப்படைக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு எவ்வகையில் பாத்தியம் என்று தெரியுமா என்றால் பிரதிவாதிகள் 22.08.2011ல் ராமநாதன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார்கள். நான் சொன்னது போல் சொத்தை பிரதிவாதிகள் ஒரு வருடத்திற்கு ஒப்படைக்க ஒப்புக்கொண்டாலும் சொத்து நாளது தேதி வரை பிரதிவாதிகள் வசத்தில் உள்ளது என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் எனக்கு எவ்வாறு சொத்து விற்பனைக்கு உள்ளது என்று தெரியும் என்றால் பிரதிவாதிகள் அன்னபூர்ணா நிதி நிறுவனத்தில் சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்று இருந்தார்கள். அதை பைசல் செய்வதற்காக 22.03.2023ல் நான் ரூ.5,00,000/-ஐ பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன். அதன்பிறகு 05.06.2023ல் மீதி தொகை ரூ.4,52,000/-ஐ கொடுத்து கிரைய உடன்படிக்கை பத்திரம் எழுதப்பட்டது. அந்த தொகையை அந்த கடனை பைசல் செய்வதற்காக தான் பிரதிவாதிகள் வாங்கினார்கள் என்றால் பைசல் செய்வதற்கு கிரைய உடன்படிக்கை செய்ததற்காகவும் வாங்கினார்கள். பிரதிவாதிகள் அவ்வாறு பைசல் செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும் நானும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்றேன். அந்த பணத்தை எங்கே கொண்டு கட்டினேன் என்றால் பிரதிவாதிகளிடம் கொடுத்துவிட்டேன். அந்த கடன் தொகையை நிதிநிறுவனத்திடம் அவர்கள் கட்டினார்களா இல்லையா என்ற விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நானும் நேரடியாக போனேன். எவ்வளவு கட்டினார்கள் என்றால் அவர்களிடம் நான் பணத்தை கொடுத்துவிட்டேன். என்னை உள்ளே அனுமதிக்கவில்லை. நான் வெளியே நின்றேன். பைசல் ரசீதில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8ல் உள்ள கடன் பைசல் செய்ததற்கான ரசீதில் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். அன்னபூர்ணா நிதி நிறுவனத்தில் கட்டவேண்டிய தொகை ரூ.4,00,000/- த்தை நான் தான் பிரதிவாதிகளை அழைத்து சென்று பைசல் செய்துவிட்டு நிலுவை தவணை இல்லை என்ற சான்றிதழை நிதி நிறுவனத்திடம் பெற்று பைசல் ரசீதை பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தேன் என்றால் பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டேன். என்னை சாட்சி கையொப்பம் செய்யும்படி கேட்டார்கள் நான் கையொப்பமிட்டேன். பிரதிவாதிகளுக்கு எதிராக ரவி என்பவர் தாக்கல் செய்துள்ள

வழக்கை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். ஏற்கனவே ரவி என்பவர் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.504/2023 வழக்கை பற்றி தெரிந்து தான் நான் பிரதிவாதிகளை நம்பாமல் நானே நேரடியாக சென்று கடனை பைசல் செய்து அசல் ஆவணங்களை நிதி நிறுவனத்திடமிருந்து பெற்று என்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கை சொத்தை கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு முன்பாக நான் அதனுடைய வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வில்லங்கம் இல்லாததால் தான் நான் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டேன். வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 12 3/4 செண்ட் அதில் வீடு எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. வீட்டினுடைய விஸ்தீரணம் என்ன என்றால் 10க்கு 10 இருக்கும். வழக்கு சொத்தில் எந்த வில்லங்கமும் இல்லாத நிலையிலும் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை விற்பனை செய்ய தயாராக இருந்தும் நான் நேரடியாக கிரையம் செய்து கொள்ளாமல் எதற்காக கிரைய ஒப்பந்தம் செய்தேன் என்றால் பிரதிவாதிகள் அவர்கள் இடத்தில் வீடு கட்டிக்கொள்ள ஒரு வருட காலம் ஆகும் என்பதால் ஒரு வருடம் கழித்து காலி செய்வதாக கேட்டார்கள். கிரைய உடன்படிக்கை தேதி தெரியுமா என்றால் 05.06.2023. நான் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 22.05.2023 அன்று கொடுத்தேன். பைசல் ரசீது எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் நான் அவர்களிடம் பணம் கொடுத்துவிட்டேன். ஒரு நாள் என்னை பைசல் ரசீதில் கையொப்பம் செய்ய அழைத்தார்கள். அந்த தேதியை மறந்துவிட்டேன். நான் பணம் கொடுத்து எத்தனை நாட்கள் கழித்து பைசல் ரசீதில் கையொப்பம் செய்ய சென்றேன் என்றால் சுமார் 10 நாட்கள் இருக்கும். நான் முதல் தவணையாக 22.05.2023ல் ரூ.5,00,000/-மும் 05.06.2023ல் ரூ.4,52,000/-மும் கொடுத்ததாக சொல்லும் நிலையில் அந்த விவரம் கிரைய உடன்படிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கிரைய உடன்படிக்கையில் கண்டவாறு ரூ.9,52,000/-ஐ பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அன்னபூர்ணா நிதிநிறுவனத்திற்கு பைசல் செய்வதற்காக ரூ.5,00,000/-த்தையும் கிரைய உடன்படிக்கை தேதியன்று ரூ.4,52,000/-த்தையும் கொடுத்தேன். நான் கொடுத்த தொகை ரூ.4,00,000/- தான் என்றாலும் பிரதிவாதிகளை நிர்பந்தம்படுத்தி அடமானக்கடன் எழுதுவதாக அழைத்து சென்று ரூ.9,52,000/- கொடுத்ததாக கூறி கிரைய உடன்படிக்கை பத்திரம் எழுதிக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் கூறியவாறு பணத்தை பெற்றுக்கொண்டு தான் பிரதிவாதிகள் பத்திரப்பதிவு அலுவலகத்தில் கையொப்பம் செய்தார்கள். கிரையத்தொகை எவ்வளவு முடிவு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ரூ.10,00,000/-. கிரைய உடன்படிக்கையில் அவர்களிடத்தில் வீடு கட்டிக்கொள்வதற்காக ஒரு வருடம் காலம் அவகாசம் கேட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கிரைய உடன்படிக்கையில் பாக்கி தொகை ரூ.48,000/-த்தை பிரதிவாதிகள் வசம் ஒரு வருட காலத்திற்குள் செலுத்தி கிரையத்தை பதிவு செய்துக்கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே அந்த ஒரு வருடம் காலம் நான் பணத்தை செலுத்துவதற்காக தான் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். ஆனால் ரூ.48,000/-ஐ அப்போதே கட்டுவதாக தான் சொன்னேன். ஏழாவது மாதத்திலிருந்தே நான் அதை கட்ட தயாராக இருப்பதை அவர்களிடம் தெரிவித்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1ன்படி கிரையத்தொகையில் 95 சதவீதத்தை பிரதிவாதிகளிடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். நான் கிரையத்தொகையில் 95 சதவீதத்தை பிரதிவாதிகளிடம் கொடுத்துவிட்ட நிலையிலும், வழக்கு சொத்தில் எந்த வில்லங்கமும் இல்லாமல் உடனடியாக கிரையம் செய்யக்கூடிய நிலையில் இருந்தும் நான் கொடுத்த கடனை திரும்ப பெறுவதற்காகதான் கிரைய உடன்படிக்கை ஒரு வருட காலம்

நீட்டிப்பு செய்து எழுதப்பட்டது என்றால் இல்லை. நான் கிரைய உடன்படிக்கையில் எழுதியுள்ளது போல் பிரதிவாதிகளுக்கு ரூ.9,52,000/-ஐ கொடுக்கவில்லை என்றாலும் நிதிநிறுவனத்திடம் கடனை பைசல் செய்ய ரூ.4,00,000/-த்தை மட்டும் தான் பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் முதலில் ரூ.5,00,000/-யும், அதன்பிறகு ரூ.4,52,000/-யும் கொடுத்தேன். வா.சா.ஆ.3 22.05.2024ல் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது சரியாக ஒரு வருட காலம் முடிவதற்கு முன்பாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்பாக நான் கிரையம் செய்துக்கொள்ள தயாராக இருந்ததாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பபோ, கடிதமோ அனுப்பவில்லை என்று சொன்னால் இல்லை. நான் நேரடியாக கேட்டேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ முதலில் ரூ.5,00,000/-மும், பிறகு ரூ.4,52,000/-மும் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அனுப்பிய அறிவிப்பில் மேற்கண்ட விவரங்களை எதையும் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்தார்களா இல்லையா என்று தெரியுமா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் கொடுத்த அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் 18.06.2024ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றாலும், அது நான் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றாலும் சரிதான். அதில் பிரதிவாதிகள் நிதிநிறுவனத்தின் கடனை பைசல் செய்ய என்னிடம் பெற்றுக்கொண்ட தொகை ரூ.4,00,000/- என்றும், கூடுதல் செலவுத்தொகை மற்றும் வட்டி சேர்த்து ரூ.5,00,000/-த்தை திருப்பி கொடுக்க தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும் தெரிந்துக்கொண்டேன் ஆனால் அது பொய். வழக்கு சொத்தின் தற்கால மதிப்பு ரூ.35,00,000/- லிருந்து ரூ.40,00,000/- வரை இருக்கும் நிலையில் அதை ரூ.10,00,000/-க்கு கிரையம் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. அவ்வளவு ரூபாய்க்கு போகாது. நான் பிரதிவாதிகள் அன்னபூர்ணா நிதிநிறுவனத்திடம் பெற்ற கடனை பைசல் செய்வதற்காக ரூ.4,00,000/-த்தை மட்டும் தான் என்னிடமிருந்து கடனாக பெற்றுக்கொண்டார்கள் என்றாலும் மேற்படி கடனுக்காக பாதுகாப்புக்காகதான் மேற்படி கிரைய உடன்படிக்கையை எழுதி வாங்கியுள்ளேன் என்றாலும் அதனால் அசல் வழக்கில் நான் கேட்டுள்ள முதன்மை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னாலும் சரியல்ல. நான் அசல் வழக்கில் மாற்று பரிகாரமாக கோரியுள்ளதிலும் பிரதிவாதிகள் என்னிடமிருந்து கடனாக பெற்ற ரூ.4,00,000/-க்கு போக மீதி தொகை பொருத்த மட்டிலும் அசல் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னாலும் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தின்படி எந்தவித மறுபயனும் பிரதிவாதிகளுக்கு செல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**விசாரணை முடிவுற்ற நேரம்** : காலை 12.24 மணி

அவையறிய இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, பின்னர் சாட்சி சொன்ன பதில் சரியென சாட்சியால் ஒப்புகொள்ளப்பட்டு, என் முன்பாக கையொப்பம் இடப்பட்டது.

(ஒம்).S.ஜீவநந்தினி,
மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.